**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS.184/2023**

நாள்.02.08.2025

**வா.சா.2. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எனக்கும், அருள்பிரகாஷ் என்பவருக்கும் எவ்வளவு நாள்கள் பழக்கம் என்றால் சுமார் 10 ஆண்டுகளாக பழக்கம் உள்ளது. நானும், அருள்பிரகாஷும் இறால் தீவனம் விற்பனை செய்யும் கடை வைத்து நடத்தி வந்தோம் என்றால் நடத்தவில்லை. இறால் பண்ணையை நான் மட்டும் தான் வைத்து நடத்தி வந்தேன். வாதி நடத்தி வந்த இறால் பண்ணை தீவனம் கடையின் பெயர் அமிர்தா அக்குவா என்ற பெயரில் நடத்தி வந்தார். மேற்படி அமிர்தா அக்குவா என்ற கடை பாப்பா கோவில் கிராமத்தில் உள்ளது. வாதியின் மற்றொரு கடை வெள்ளப்பள்ளத்தில் அணுக்கிரகா அக்குவா பீல்டு என்ற கடையை நடத்தி வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி சூசைநாதன் என்பவர் இறால் பண்ணை வைத்திருந்தார் என்றால் சரிதான். இறால் தீவனம் வாதியினுடைய கடையில் வாங்கி இறால் பண்ணை பிரதிவாதி நடத்தி வந்தார் என்றால் சரிதான். வாதியினுடைய கடையில் நானும், பிரதிவாதியும் இறால் பண்ணை நடத்தி வருவதற்காக தீவனம் வாங்கி வந்தோம். பிரதிவாதியை எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தியது தொடர்பாக எனக்கு என்ன தெரியும் என்றால் சூசைநாதன் என்னிடம் ரூ.6,00,000/– கடன் கேட்டார் நான் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். அதன் பிறகு வாதியிடம் ரூ.6,00,000/– கடன் கேட்டார். வாதி என்னிடம் கேட்ட போது பிரதிவாதிக்கு பணம் கொடுக்க வேண்டாம் என்று சொன்னேன். அதற்கு வாதி அடமான கடன் கொடுக்கலாம் என்று சொன்னார். அதன் பிறகு வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தினார்கள். வாதி தான் இந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்ய என்னை அழைத்தார். இந்த வா.சா.ஆ.1 ஆவணம் யார் வாங்கி, எப்போது தட்டச்சு செய்து ஆவணத்தை தயார் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. அடமானம் கடன் தொகை கொடுத்த விவரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அடமான பதிவு ஏற்பட்ட பிறகு பணத்தை வாதி, பிரதிவாதியிடம் கொடுத்தார் என்று எனக்கு தெரியும். எவ்வளவு தொகை கொடுத்தார்

என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். ரூ.6,00,000/– வாதி என்னிடம் கொடுத்து எண்ணி பார்த்து 500 ரூபாய் தாள்கள் 1200 நோட்டுகள் இருந்ததை சரிபார்த்து மொத்த தொகை ரூ.6,00,000/– ஐ நானும், அருள்பிரகாஷீம் பிரதிவாதி சூசைநாதனிடம் கொடுத்தோம். வா.சா.ஆ.1–ல் என்னை தவிர வேறு யாரும் சாட்சி கையொப்பம் போட்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது சாட்சி மீண்டும் கையொப்பம் போட்டுள்ளது தெரியும். ஆனால் ஆளை தெரியாது. அந்த நபரை பிரதிவாதி சூசைநாதன் தான் அழைத்து வந்ததாக சொன்னார். வா.சா.ஆ.1 ஆவணம் வாதியால் பிரதிவாதிக்கு எந்த வித தொகையும் கொடுக்கவில்லை என்றும், வாதியும், நானும் நெருங்கிய நண்பர்கள் என்பதாலும், உண்மை விவரங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சூசைநாதனும், அருள்பிரகாஷும் இறால் தீவனம் விற்று, வாங்கிய வகையில் கடன் உள்ளது என்றும், அந்த கடனுக்காக பொறுப்பு ரீதியாக இந்த வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றும், இந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரிந்தும் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி, வாதிக்கு இந்த அடமான கடன் பத்திரத்தின் அடிப்படையில் பணம் ஏதும் பெற்றுக்கொள்ளாததால் இந்த ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது அல்ல. இந்த ஆவணத்தின் அடிப்படையில் எந்த ஒரு பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

| |
|---|
| Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.<br><br>Subordinate Judge,<br>Thiruthuraipoondi. |